'பத்ரகாளி'யும் பரமானந்தரும்!

கதையல்ல-நாட்டின் நிலை

விரோதியின் விஜயம்

சிலந்திக் கூட்டில், திகைக்கிறார்!

திராவிடநாடு

மலர் 11 | 17—5—53 | இதழ் 46

விலை 2 அணா

பசி பொறுக்காது, அழுகிறான், பாலகன். பரிதவிப்பைக் காணச் சகியாத பரமானந்தம் பிள்ளை, ஆசை மனைவியை அழைத்து, 'அடியே! அவனுக்குச் சோறுபோடேன்!' என்றார் பாலகனோ, முதல்தாரத்துப் பையன்! வாய்த்திருக்கும் மாற்றாந்தாயோ, 'பத்ரகாளியின் சொரூபம்!! பயந்தபடிதான், கேட்டார். அவளோ, பாலகனுக்குச் சோறு போடவுமில்லை — பதில் கூறவும் இல்லை. 'கருணை காட்டடி! கண்ணீர் ஆறாக மாறவில்லையோ?' என்று பலமுறை கெஞ்சினார். அவளோ, 'ஆளனுப்பியிருக்கிறேன் அவசரம் ஏன்?' என்றாள். "வீட்டுச் சோற்றை எடுத்துப்போட, வெளியில் எங்கு ஆளனுப்பியிருக்கிறாய்?" — என்று கேட்டார், பரமானந்தம். "டாக்டரை அழைத்துவர......!" என்று பதில் தந்தாள், 'பத்ரகாளி' டாக்டர், அவளது, தம்பி! பையனுக்குச் சோறுபோடுவதற்கும் டாக்டரை அழைத்துவரச் சொல்வதற்கும், பொருத்தமென்ன?—என்று எண்ணினார், பரமானந்தம்.

"பையனுக்குப் பசிப்பதாகச் சொன்னீர்களல்லவா?"

"நான் சொல்வதென்ன? அவனே, கதறுகிறான்!"

"உண்மையாகவே அவனுக்குப் பசிக்கிறதா என்று பரிசோதிக்கவே, டாக்டரை அழைத்துவரச் சொன்னேன்."

*

'பத்ரகாளி'யை மணந்த கணவனின் நிலையில், 'பஜகோவிந்தம்' பாடும் அன்பர் ஆச்சாரியார், இருக்கிறாராம்—கடந்த சில நாட்களாக. டில்லி சர்க்காரைப் பார்த்து, பத்துகோடி மான்யம் கேட்க, மான்யத்துக்குப் பதில் கிருஷ்ணமாச்சாரியார் அனுப்பப்பட்டிருப்பது. ஆட்சியாளரின் வட்டாரத்தில், குழப்பத்தை உண்டுபண்ணியுள்ளதாம்.

கேட்டது சோறு! வருவது டாக்டர்!! மான்யம் கேட்டார்! மானம் பறிபோகும், கிருஷ்ண விஜயம் நடக்கிறது!!

பத்ரகாளியை மணந்த கணவனாகக் காட்சியளிக்கிறார், அன்பர் ஆச்சாரியார்.

*

ஆச்சாரியார், இந்நாட்டின் முதலமைச்சர். அவர், நாட்டின் பஞ்ச நிலையை விளக்கி, பத்துகோடி ரூபாய் உதவவேண்டுமெனக் கேட்டார்.

டில்லி மௌனம் சாதிப்பதைக் கண்ட தமிழகத்துப் பார்லிமெண்டு உறுப்பினர்கள், பண்டிதநேருவிடம் மகஜர் சமர்ப்பித்தார்கள்.

பதில் வாராததைக் கண்ட நிதியமைச்சர் சுப்ரமணியம், டில்லிக்குப் பலதடவை சென்றுவந்தார்.

பயன், பணம் வரவில்லை! கிருஷ்ண விஜயம் நடக்கிறது!!

*

ஐயா!

நாங்கள் பணம் கேட்பது, அநாவசியமான காரியத்துக்கு அல்ல. சென்னை சர்க்கார், பணத்தை, வீண்செலவு செய்தது கிடையாது. சந்தேகமிருந்தால்ஆடிட்டரைஅனுப்புங்கள். அவர் பரிசோதனைசெய்து முடிவு சொல்லட்டும். மக்களின் கஷ்டங்களைப் போக்கப் பணம் தேவை. உதவுங்கள்! உதவுங்கள்!!

— இவ்விதம், கடிதம் ஒன்றும் டில்லிக்குப் போயிற்று. ஆடிட்டரை அனுப்பச் சொல்லி!

டில்லி, அதற்கும் இசையவில்லை! அன்பர் கிருஷ்ணமாச்சாரியாரை அனுப்பியிருக்கிறது. அவர், வந்தார்—சுற்றிப்பார்த்தார் — சென்று விட்டார்.

*

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், கடந்தமுறை சென்னைக்கு வந்தபோது ஆச்சாரியாரை 'முட்டாள்' எனும் அலங்கார வார்த்தைபோட்டு அர்ச்சித்துவிட்டுச் சென்றவர்.

அவரை, டில்லி அனுப்பியிருக்கிறது—ஆச்சாரியாரின் கோரிக்கையைப் பரிசீலனை செய்ய

கீழ்ப்பாக்கம் சீரடைவதிலும், ஆச்சாரியார் உள்ளம் அவதிப்படுவதிலும், அவர்தம் குழாம் வேதனையோடு வீற்றிருப்பதிலும் தவறு என்ன இருக்கிறது?

வீட்டுக்குடையவன் சொல்லியும் பாலகனுக்குச் சோறு போட டாக்டர் பரிசோதனை நடப்பதென்றால், பலரும் எள்ளி நகையாடத்தானே செய்வர்?

*

ஆச்சாரியாருக்கு, அவர்தம் அன்பர்குழாம் சூட்டிய, 'புகழ் மாலை'களில் ஒன்று—அவர் கவர்னர் ஜனரலாக இருந்தவர், நேருவின் நண்பர், எனவே, நினைத்ததையெல்லாம் சாதிப்பவர் என்பதாகும்.

நினைத்ததை. எங்கே சாதிக்கிறார்? விரோதியன்றோ, விஜயம் செய்கிறார்! வெந்த புண்ணில் வேலைச் சொருகும் செயல்தானே, இது!

உதவி கேட்டது, ஒரு மாகாணத்தின் சர்க்கார்.

அவ்வித உதவி கேட்பது, நியாயமானது என்று தூது போய் வலியுறுத்தினர், பார்லிமெண்டு உறுப்பினர்கள்.

தாம் கேட்பதில், தவறு இருந்தால், வந்து சோதனை செய்யலாமென்று மாகாண சர்க்கார், கடிதமும் தீட்டினர். பத்திரிகைகளில் புள்ளி விபரத்தோடு அறிக்கைகளும் விடுத்தனர்.

இருந்தும், நிலைமையைக் கண்டுவர, டி. டி. கே. அனுப்பப்படுகிறார்.

அதிலும், ஆச்சாரியாருக்கு விரோதமான டி. டி. கே. அனுப்பப்படுகிறார்.

'சன்லைட்-சோப்' கம்பெனியின் ஏஜண்டும், இன்றைய தொழில மந்திரியுமான தோழர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார். சென்னைக்கு வந்து சேர்ந்ததும், பத்திரிகை நிருபர்கள் அவரைக் கேட்டிருக்கிறார்கள்— "தாங்கள் சென்னை மாகாணத்தின் பணக் கஷ்டம் குறித்து அறிந்து செல்வதற்காக வருகிறேன் என்று தெரிவித்துள்ளீர். தாங்கள், டில்லி மந்திரி எனும் ஹோதாவில் விஜயம் செய்திருக்கிறீரா? அல்லது தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி மெம்பர் எனும் நிலையிலா?" என்பதாக.

பதிலளித்த டி. டி. கே. தெளிவாகக் கூறவில்லை.

"இரண்டு மாகாணத்து ஒன்றுதானே!" என்று சொல்லியிருக்கிறார்.

மந்திரி எனும் ஹோதாவில் வந்தால், பிரயாணச் செலவை. சர்க்கார்பொக்கிஷத்திலிருந்து எடுத்துக் கொள்ளலாம்—எனவேதான், நிருபர் கேட்டார்.

கிருஷ்ணமாச்சாரியாரோ, விளக்கமான பதில் தரவில்லை.

தனிப்பட்ட முறையில் எவரும் வரலாம் போகலாம் — இவரோ, தனிப்பட்ட முறையில வரவில்லை. டில்லியின் தூதராக வந்திருக்கிறார்—இந்த விஷயம்தான், ஆச்சாரியார் குழாத்தை அல்லற்படச்செய்திருக்கிறது.

அதற்குச் சமாதானம் கூற 'தினமணி' இதழ், தலையங்கம் தீட்டுகிறது.

கோபம் தாளமுடியாததால், குமுறுகிறது, 'கல்கி' இதழ்.

*

கிருஷ்ணமாச்சாரியார் வந்ததும் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர் காமராஜ், அவருடன் சேர்ந்து கொண்டார். இருவரும், சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள்.

கிருஷ்ணமாச்சாரியார், ராஜகோபாலாச்சாரியை 'முட்டாள்' என்று வாணித்தவர்.

இந்த இருவரும், ஆச்சாரியார் சர்க்கார் விடுத்த வேண்டுகோள் குறித்து, 'சிபார்சு' செய்யச்சுற்றுப் பயணம் செய்கிறார்கள்.

சிந்தனைக்குரிய விஷயம் தான், இது! 'கல்கி'க்குச் சீற்றமும், ஆச்சாரியார் உள்ளத்தில் புயலும் ஏற்பட்டிருப்பதில், ஒன்றும் ஆச்சரியமில்லை.

*

'கல்கி' இதழ் கடந்த வாரம் மிக நாசுக்காக, பண்டித நேரு மீது, பாய்ந்திருக்கிறது.

பண்டித நேருவை, சுற்றியிருப்போர் கெடுத்து விடுகிறார்களாம்!— கூறுகிறது.

நிதியமைச்சர் தேஷ்முக் தனது நண்பரொருவர் கட்ட வேண்டிய 30 லட்ச ரூபாய் வருமான வரியை, ரூ 10 லட்சமாகக் குறைத்திருக்கிறாராம். இத்தகைய மந்திரிமார்களின் மத்தியில், பண்டித நேரு உழல்வதாகப் பரிதாபப்படுவது போல, பண்டிதரின் இயலாமையையும், எடுத்த கைப் பாவை போல அவர் ஆகிவிட்டதையும், விளக்கியிருக்கிறது.

நிதியமைச்சர் தேஷ்முக் மீதும், பிரதமர் பண்டித நேரு மீதும், இத்தனை நாள் இல்லாத கோபமும் வேகமும், 'கல்கி' யாருக்குக் கிளம்பக் காரணம் என்ன?

ஆச்சாரியாரின் கோரிக்கையை டில்லி அலட்சியம் செய்தது மட்டுமின்றி, அவரது விரோதியையே, இங்கே அனுப்பியிருக்கிறது, டில்லி.

இந்தச் சிந்தனை, மானமுள்ள எவரையும் எரிச்சல் கொள்ளத்தான் செய்யும். கல்கியார், விதிவிலக்கல்ல!

*

ஆச்சாரியாரின் ஆட்சிக்கெதிராக 'அக்டோபர்' அதிர்ச்சி காண விரும்பும் காமராஜரும், அவரது நண்பர் கிருஷ்ணமாச்சாரியும் சுற்றுப் பயணம் செய்கிறார்கள்.

நமது நண்பர் கோவை சுப்ரமணியமோ, 'அப்பன் குதிருக்குள் இல்லை'யென்றானாமே, அந்த அப்பாவியைப் போல, "காமராஜருக்கும் ராஜாஜிக்குமிடையில் கண்டிப்பாக வேற்றுமையில்லை," என்கிற, பல்லவியைப் பாடிக் கொண்டு வருகின்றார்.

காங்கிரஸ்காரர்களோ மாநாடு கூட்டி, 'ஓ! ஆச்சாரியாரே! தியாகிகளாம் எமக்கு நிலமா தரமாட்டீர்? பார்க்கிறோம், ஒரு கை, மறந்து விடாதீர், திருப்பரங்குன்றத்தை!!" என்று எச்சரிக்கின்றனர்.

*

ஆச்சாரியார் உள்ளம், அவதிப்படுவதில், அர்த்தமில்லாமலில்லை.

(2-ம் பக்கம் பார்க்க).

நடக்க இருப்பவை

மதுரமங்கலம் 16—5—53 சனி மாலை 6 மணிக்கு தி. மு. க. இரண்டாம் ஆண்டு விழா தோழர் எஸ். தெய்வசிகாமணி எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் தோழர்கள், சி. என். அண்ணாதுரை, சி. வி. இராசகோபால், சி. வி. எம். அண்ணாமலை ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள். இரவு 10மணிக்கு 'தமிழ் நாட்டுக் கள்வன்' என்னும்நாடகம் நடைபெறும்.

தஞ்சை 17—5—53 ஞாயிறு காலை 9-மணிக்கு வாணக்கார வைக்கோல்காரத் தெருவில் தோழர் த. வி. தவமணிராசனுக்கும் தோழியர் சரோஜாவுக்கும் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும். தோழர்கள் என். எஸ். இளங்கோ, தருமைச்செல்வன், தோழியர்கள் அருள்மொழி, பூங்கோதை, ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்கள்.

தி. மு. க. பொதுக் குழுக் கூட்ட அழைப்பு

—*—

அன்புடையீர்!

வணக்கம். பொதுக்குழு உறுப்பினர்களின் 2-வது கூட்டம் 31—5—53 ஞாயிறன்று காலை 10-மணிக்கு, வடஆற்காடு மாவட்டம் அரக்கோணம் டவுன் ஹாலில் நடைபெறும். தாங்கள் தவறாது வருகைதர வேண்டுகிறேன்.

அன்பன்,

அண்ணாதுரை,

பொதுச் செயலாளர்.

திராவிடநாடு

காஞ்சி] 17—5—53 [ஞாயிறு

அமெரிக்க 'சர்ட்டிபிகேட்!'

"ராஜ்யங்களின்மீது அமைக்கப்பட்டிருப்பதுதான் இந்திய அரசாங்கம். எந்த வேலையை முடிக்க வேண்டுமென்றாலும், ராஜ்ய சர்க்காரின் உதவியில்லாமல் ஒரு காரியமும் நடக்கமுடியாது.

இத்தகைய சிக்கல் நிரம்பியதாக இந்திய ஆட்சி அமைப்பு இருந்தும், காரியங்கள் சரிவர நடைபெற்றுவருவதற்குக் காரணம் முன்பிருந்தே இருந்துவரும் நிர்வாக அமைப்புதான். எல்லா ராஜ்யங்களும் தகராறின்றி, மத்ய சர்க்காருடன் ஒத்துழைத்து வருவதைக் காண்கிறோம் கஷ்டசாத்தியமான இக்காரியம். ராஜ்யங்களிலும் மத்ய சர்க்காரிலும் ஒரே கட்சி வலிமையுள்ளதாக இருப்பதாலும், அந்தக் கட்சியைத் தலைமை தாங்கி நடத்திச் செல்பவருக்கு அலாதியான செல்வாக்கு இருப்பதாலும், எளிதாக நடைபெற்று வருகிறது இதனாலேயே அதிகபிரச்னைகளும், குழப்பங்களும் எழவில்லை. ஆனால், இந்த சூழ்நிலை எப்போதும் நீடிக்குமா? எதிர்காலத்தில் இப்போதுள்ளதுபோன்ற செல்வாக்குள்ள தலைமை கிடைக்குமா? சாதாரணத் தலைமை கிடைத்தால், பிரிந்துகிடக்கும் ஒவ்வொரு ராஜ்யங்களையும் எப்படி சமாளிக்கமுடியும்? இப்போதே பலப்பல இடங்களில் சுயநிர்ணய உரிமைகோரும் ராஜ்யங்கள் பெருகி வருகின்றன. இந்நிலையில், இந்த ஆட்சியமைப்பு, எதிர்காலத்தில் இயங்கமுடியும் என்பது எனக்குச் சந்தேகமாயிருக்கிறது.

*

திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில், பேசப்பட்டதல்ல, இது.

கடந்த ஐந்துமாதகாலமாக, இந்திய சர்க்காரின் விருந்தாளியாக இருந்துவரும் அமெரிக்க அறிஞர் ஆப்பிள்பே அளித்திருக்கும், 'சர்டிபிகேட்!'

இந்திய சர்க்காரின் நிர்வாகத்தில் என்னென்ன முற்போக்கான சீர்திருத்தங்களைச் செய்யலாம் என்பதை ஆராய்ந்து அறிவதற்காக இந்தப் பேரறிஞர், தருவிக்கப்பட்டார்.

நிர்வாகத் துறையில் சிறந்த ஆராய்ச்சியுடையவராம், இவர். அமெரிக்காவில், நிர்வாக அதிகாரிகளுக்கான பயிற்சிக் கல்லூரி நடத்தி வருகிறாராம்.

அவர், நிர்வாக சம்பந்தமான பல விஷயங்களையும் நுணுக்கமாகப் பரிசீலனை செய்த பிறகு விடுத்திருக்கும் அறிக்கையில், மேலே குறிப்பிட்டபடி, தமது கருத்தைத் தெரிவித்துள்ளார்.

மத்திய சர்க்காருக்கு உயிரளிப்பது மாகாண சர்க்கார்கள்.

மத்யபீடம் சரியாக இயங்குவதற்குக் காரணம், ஒரே கட்சி இருப்பது—செல்வாக்குள்ள தலைமை இருப்பது.

என்று, டில்லி சர்க்கார், இன்று நிர்வாகப் பொறுப்பை சரிவர நடத்திவர ஒத்தாசையாயிருப்பது சம்பந்தமான விபரங்களை விளக்கிவிட்டு, நேரு குழாம் திடுக்கிடக்கூடிய ஐயத்தை எழுப்புகிறார்.

இது, எப்போதும் நீடிக்க முடியுமா? இன்று செல்வாக்குள்ள கட்சி. எப்போதும் இருக்குமா?

இப்போதுள்ளதுபோல, செல்வாக்குள்ள தலைமை, எதிர்காலத்தில் நீடிக்க முடியுமா?

என்கிற, சந்தேகங்களையும் எழுப்பி, இது நீடிக்கவில்லையென்றால் இந்திய ஆட்சி அமைப்பு இயங்குவது அசாத்யமென்றும், அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

தோழர் ஆப்பிள்பே தெரிவித்திருக்கும், இதே அபிப்பிராயத்தைத்தான் நாம் கூறிவருகிறோம்.

டில்லி சர்க்கார், பிரிட்டிஷ்காரன் ஏற்பாடு செய்துதந்தது.

காங்கிரஸ் கட்சி, இந்திய உபகண்டமுழுமையும், என்றும் வெற்றியோடு விளங்கமுடியாது.

எதிர்காலத்தில், மக்களை மயங்க வைக்கக்கூடிய காங்கிரஸ் தலைமை. கிடைக்க முடியாது.

இவ்விதம், நாம் அடிக்கடி வெளியிட்டு வருகிறோம்—ஆனால், நமது தேசிய நண்பர்கள், இதை, ஏளனப்படுத்துவதிலேயே நேரத்தைச் செலவழித்து வருகிறார்கள்.

தோழர் ஆப்பிள்பே, அமெரிக்கர்—நிர்வாகப் புலி—அவர், இன்று இந்தச் சந்தேகங்களை எழுப்புகிறார்.

நியாய புத்தியுடன், எதிர்காலம் குறித்துச் சிந்தித்துப் பார்க்கும் எவருக்கும், இந்தச் சந்தேகங்கள் எழும்பாமற் போகாது.

சாதாரணத் தேர்தல் முதல் மிகப் பெரிய பிரச்னைவரை, ஆட்சி விஷயங்களிலாகட்டும் அல்லது கட்சிச் சச்சரவுகளிலாகட்டும், பண்டித நேரு அவர்களின் ஜோதியைக் காட்டி மக்களை வசியப்படுத்த முயற்சிக்கிறார்கள், காங்கிரஸ்காரர்கள்.

அவருடைய பெயரைக் காட்டி, இந்தக் காரியங்களை ஓரளவு சாதித்துக்கொள்ளவும் முடிகிறது.

ஆனால், எதிர்காலத்தில்? பண்டித நேருவின் இடத்தை பூர்த்தி செய்ய யாரிருக்கிறார்கள்?—இதைத்தான், ஆப்பிள்பே, கேட்கிறார்.

வெள்ளைக்காரன் அமைத்துத் தந்த இந்திய ஆட்சிமுறை, எத்தனை நாட்களுக்கு நீடிக்கமுடியும்?

இப்போதே பல ராஜ்யங்கள் சுய நிர்ணயம் கோருகின்றன

என்றும், தெரிவிக்கிறார், ஆப்பிள்பே. இந்தக் கோரிக்கை வளரும் என்றும் அபிப்பிராயப்படுகிறார்—அவர், இந்திய சர்க்காரின் ஆசைக்குரிய நண்பர்.

அவர் கிளப்பியிருக்கும் சந்தேகங்கள், சாதாரணமானவையல்ல.

ஒரே நாடு! ஒரே ஆட்சி!—என்று வாய்விட்டு அலறிக்கொண்டிருக்கும் நண்பர்கள், ஆப்பிள்பேயின் கருத்துக்களை கவனிக்க விரும்புகிறோம்.

அவர், திராவிட நாட்டுப் பிரச்சினையை அறியும் வாய்ப்புப் பெற்றவரல்ல—நிர்வாக மேதை. அவர், கூறுகிறார். இவ்விதம்! 'எதிர்காலத்தைப்பற்றி அஞ்சுகிறேன்' என்கிறார்.

அவர் எழுப்பும் சந்தேக வினைகளை தேசிய நண்பர்களுக்குச் சமர்ப்பிக்கிறோம்.

ஜோதியும்—இருட்டும்

'ஆகா! உங்களது நற்குணங்களைக் கண்டேன். உள்ளம் களி கொண்டேன். பட்டினியும் பசியும் நீங்கி, சுகமாக வாழ்கிறீர்கள். இது, உங்களது உழைப்பின் பலன். உங்களைப் பாராட்டுகிறேன். மற்ற பாகங்களிலிருக்கும் மக்களைப் போல, சர்க்காருக்குச் சஞ்சலம் தரவில்லை, நீங்கள்.''

*

மராட்டிய மண்டலத்தின் சுற்றுப் பயணத்தின்போது, பண்டித நேரு, இத்தகைய பாராட்டுதலை வழங்கியிருக்கிறார். மராட்டிய குடியானவர்கள், தத்தமது கஷ்டங்களைக் கடந்து சுகம் அனுபவிக்கிறார்களாம். தெற்கிலிருக்கும், குடியானவர்களோ, சர்க்காரை எதிர்பார்த்து, தொல்லை தருகிறார்களாம்.

பண்டிதர் கூறுகிறார், இதனை. தேஷ்முக்கின் தேவியார் துர்காபாய் அம்மையார் அனுப்பித்து, பல இடங்களில் பஞ்ச நிவாரண வேலைகளைச் செய்யும் ஏற்பாடுகள் செய்யப்பட்டது, தெற்கில் அல்ல—மராட்டிய மண்ணில்தான். சுமார் 4 இலட்சம் ரூபாயுடன், மத்யசர்க்காரின் பார்வையில், பஞ்ச நிவாரண வசதிகளைப் பெற்றனர், மராட்டியக் குடியானவர்கள். அவர்களுக்கு ஆத்திரம் எப்படி வரமுடியும்?

தொடர்ந்தாற்போல், ஆறுண்டுகளாக பசியாலும் பஞ்சத்தாலும், வாடிடும் பிரதேசமல்ல,மராட்டியம். எவ்விதம், குமுறலிருக்க முடியும், அவர்களுக்கு? பூச்செண்டு, புகழ் வாழ்த்தும் கூற, அவர்களுக்கு உடம்பில் தெம்பு இருக்கிறது! தெற்கில், இதனை, எப்படி எதிர்பார்க்க முடியும், பண்டிதர்?

வயது அதிகமானாலே, வசிகரமான பொருள்கள்மீது, ஆசை அதிகரிப்பது, அரசியல் 'கிழவர்'களின் போக்காக இருந்து வருகிறது. உழைத்து அலுத்த அவர்கள், உத்யானவனத்திலே உட்கார்ந்தபடி, 'வசீகரங்களை' ரசிப்பதில், ஆட்சேபமில்லை நமக்கு. ஆனால், அதே சுபாவத்தோடு, அரசியல் வெயிலில் ஏன் அலையவேண்டும்!

மராட்டிய மக்கள், பூரிப்போடு நடந்துகொண்டார்களாம்.

ராயலசீமை போன்ற இடங்களுக்குச்சென்றால், வேதனை விருத்தம், கேட்கிறதாம்.

பலன் பெற்றோர், ஆனந்த கீதம் பாடுவதில் வியப்பில்லை!

பசித்த வயிறு கொண்டோரிடம் முகாரி தவிர, மோகனமா கிளம்பும்!!

பசுஞ்சோலையில் முல்லை மலர் கிடக்கும்—முகர்ந்தும் பார்க்கலாம்.

பாலைவனத்தில் சூடேறிய மணலும், வீசும் அனலும்தானே கிடைக்கும்.

பண்டிதர் இதனை மறந்துவிட்டார்போலும்—மராட்டியம், மகிழ்கிறதாம்! ராயலசீமை, துயர கீதம் எழுப்புகிறதாம்!!

மராட்டியம்போன்ற இடங்களுக்கு மத்ய சர்க்காரிலிருந்து சென்றிருக்கும், 'உதவிகள்' கொஞ்ச நஞ்சமல்ல. பம்பாய் சர்க்காருக்கு, டில்லியிடமிருந்து கிடைத்திருக்கும் சலுகைகளும் ஏராளம்.

மராட்டியம், ஆறுண்டுப் பஞ்சத்தைக் காணாத இடம்! அங்கே இவ்வளவு உதவிகள்!!

தென்னாடு, தொடர்ந்து துயரங்களைச் சந்தித்து வருகிறது. இங்கே, உதவியில்லை!!

*

தென்னிந்தியா, ஓரவஞ்சனையுடன் நடத்தப்படுகிறது. ஐந்தாண்டுத் திட்டத்தால், ஒரு பயனுமில்லை. பெரிய பெரிய நீர்ப்பாசன திட்டங்களெல்லாம் வடநாட்டில்தான் இருக்கின்றன. தென்னாட்டில் உணவுக் கஷ்டம் தொடர்ந்து நீடிப்பது தெரிந்தும், எந்தவித உதவியும் இல்லை. டில்லி, நமக்கு வெகு தொலைவிலிருக்கிறது.'' *என்று மைசூர் முதலமைச்சர் அண்மையில் வெளியிட்டிருக்கிறார்.*

டில்லி, தொலைவிலிருக்கிறது!—இதே வார்த்தையை திருவாங்கூர் கொச்சி அமைச்சர்களும், அடிக்கடி கூறுகிறார்கள்.

இவ்விதம் அவர்கள் கூறுவதற்குக் காரணம், டில்லி காட்டி வரும் அலட்சியமேயாகும்.

ஆனால், பண்டிதரோ, இங்கே ஆனந்தகீதம் கேட்கமுடியவில்லையென ஆயாசப்படுகிறார்.

வேதனையும் சோதனையும் தாக்க வெந்துமடியும் தென்னாட்டு மக்கள், பண்டிதரைக் கண்டால் சோகக் கதைகளைக் கூறுகிறார்களாம்.

மராட்டியத் தோழர்கள், மகிழ்ச்சியோடு நடந்துகொள்கிறார்களாம்.

மராட்டியத்துக்கு வெண்ணெயும் திராவிடத்துக்குச் சுண்ணாம்பும் தடவிவிட்டு, இரண்டு இடங்களிலும் "ஜே! ஜே!!" ஒலியை எதிர்பார்க்கிறார்.

விசித்திரமான சுபாவம்—வரவர அதிகமாகி வருகிறது, டில்லித் தலைவருக்கு

தென்னாட்டினரின் சோகம், நாராசம்போல் படுகிறது!

வடநாட்டின் வாழ்த்தைத் தென்னாட்டிலும் எதிர்பார்க்கிறார்!

மாளிகையில், விருந்து கிடைப்பது சுலபம்.

மண்மேட்டில், விருந்து கிடைக்காது—வேதனைக்கீதமே ஒலிக்கும்.

ஈரிடத்திலும் இசையையும் இன்பத்தையும் எதிர்பாரார், நிலைமையறிந்தோர். ஆனால், பண்டிதர் எதிர்பார்க்கிறார்! பார்வையில் பழுதா, கருத்தில் கோளாறா, அல்லது பாசாங்கின் உச்சக் கட்டமா என்று கேட்கும் அறிவுலகம்—அவரது போக்குக் கண்டு. அதனை மறந்துவிட்டார்போலும், ஆசிய ஜோதி!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்னை அலட்சியம் செய்கிறது, டில்லி.

தனது விரோதிகளைத் தட்டிக்கொடுத்து அனுப்புகிறார், பண்டித நேரு.

இங்கிருக்கும், காங்கிரஸ் தலைவரோ, எக்காளம் செய்கிறார்.

காங்கிரஸ்காரர்களோ, மிரட்டுகின்றனர்.

வேதனையான சூழ்நிலைகள்தான்! அன்பர் ஆச்சாரியார், தமது தள்ளாத காலத்தில் இத்தகைய சிலந்திக்கூட்டில் அகப்பட்டுச் சிக்கித் தவிக்கிறார். மனம் பதைபோகிறது, ஒரு பக்கம்! அவரது சர்க்காரை, மேலிடம் மதிக்கவில்லை—காங்கிரஸ் கட்சி மதிக்கவில்லை—பண்டித நேரு சந்தேகிக்கிறார்—பலரும் ஏசுகின்றனர்.

பரிதாபத்துக்குரிய சூழ்நிலை—பத்தாளியைப் பத்தினியாகக் கொண்ட பாமரனைப்போன்ற நிலையிலிருக்கிறார், ஆச்சாரியார். பரிதாபப்படுகிறோம்—ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆட்டுவதற்குரிய அசைந்து கொடுப்பதில் ஆச்சாரியார்மட்டும் விலக்கா? வடநாடு ஆட்டுகிறது—தென்னாடு ஆடுகிறது! ஒருவர் ஆட்டவும், இன்னொருவர் ஆடவுமான நிலை அரசியலில் ஏற்படக்கூடாது. "ஆட்டுவித்தால் யாரொருவர்தான் ஆடாதாரே'' என்ற, மதசம்பிரதாயத்தை அரசியலிலும் நுழையவிட்டு ஆண்டான் அடிமை மனப்பான்மையை, அதாவது டில்லி ஆண்டானாகவும், சென்னை அதற்கு அடிமையாகவும் இருக்கும் நிலையை வளர்க்கக்கூடாது—மாற்றவேண்டும்—மாறவேண்டும்.

தேரோட்டம்—மலர் சிதைந்தது!

"ஐயோ, ஆண்டவனே! அறநெறித் திருக்கூட்டத்தின் அமைப்பாளன், நான். ஆனித் திருமஞ்ஞன உற்சவம், நடைபெறுவதற்குக் காரணமும், நான்தான். அடியார்களைப் பூஜிக்கத் தவறியதில்லை. போகாத புண்யஸ்தலங்கள் இல்லை. எனக்கா, இந்தக்கதி? கண்ணைப்போல் வளர்த்தேன்! பொன்னைப்போல் போற்றினேன்' சிங்காரச் செல்வன்—அவன் சிதைந்து கிடக்கிறானே, கண்முன். புதுச் சட்டைமாட்டி, 'போப்பா! போய், பெருமானைச் சேவித்துவிட்டு, வா' என்றனுப்பினேன். இதோ, அரைபட்டுக்கிடக்கிறான்! அங்க அடையாளம் தெரியாமல் கிடக்கிறான்! என் உள்ளம் பதறுகிறது — கண்முன் கிடக்கிறான! கன்னங்கரிய கூந்தல், இரத்தம் வழிந்து சிவப்பாகிவிட்டது. நான் அள்ளி அணைத்த அவன் உருவம், இதோ, உருத்தெரியாது சதையும் எலும்புமாய்க் கிடக்கிறது. 'அப்பா' என்று அழைக்கும் அவன் வாய் எங்கே? எங்கே, என்செல்வன்? எம்பெருமானே, எங்கே என் மகன்? தேரிழுக்கவந்தானே! தின்றுவிட்டீரே, பெருமானே!!"—என்று முத்துச்செட்டியார் வாய்விட்டுக் கதறவில்லையென்றாலும், உள்ளம் துடித்திருப்பார்.

பன்னிரண்டு வயதுப்பையன், பள்ளிக்கூட விடுமுறையில பெற்றோரின் அருகிருந்து ஆனந்தம் அளிக்கும் சின்னஞ்சிறு மாணவன், தேரோட்டம் காணச்சென்று, தேருக்கடியில மாண்டு, சதையும் எலும்புமாய்க் கிடக்கிறானென்றால், தாங்கக்கூடிய விஷயமா, அது? நெஞ்சில் நினைத்தாலே, நம் கண்களில், நீர்வருகிறது பெற்றமனம், எவ்வளவு, துடித்திருக்கும்!

கடந்த 6-ந்தேதி, நெஞ்சைக் குலுக்கக்கூடிய இந்தச் சம்பவம், சேலத்தைச் சேர்ந்த இராசிபுரத்தில் நடைபெற்றிருக்கிறது.

அலங்கரிக்கப்பட்ட தேரில், அதிர்வேட்டுகள் முழங்க, ஆயிரமாயிரம் மக்கள் இழுக்க, சர்வாலங்காரபூஷிதராய். தம்பதி சமேதராய், வரதராஜபெருமாள் வலம்வந்திருக்கிறார். அப்போது, இந்த 'அதிர்ச்சிதரும்' விபத்து நடைபெற்றிருக்கிறது.

சிறுவன் சண்முகம், தேருக்கடியில் சிக்கிச் சிதைந்துபோனான்.

சிறு மலர்மீது சிறுமலையுருண்டால், எப்படியிருக்கும் அந்தக் காட்சி? இரத்தமும் சதையும், தேர்ச் சக்கரத்திலே, ஒட்டிக்கொண்டன! சிங்கார உடல், சிதைந்து, சின்னபின்னமாகிவிட்டது!!

தீனதயாபரனைச் சேவிப்பதில் சிறிதும், தவறாத குடும்பம், 'பிள்ளைக் கனியமுதே! பேசும் பொற்சித்திரமே!' என்று கொஞ்சி மகிழ, குழந்தையில்லையே என்று இரண்டு திருமணங்களைச் செய்துகொண்டு, க்ஷேத்ராடனங்கள் சென்று, செல்வன் பிறக்காததால் மூன்றாவதாக மணம்முடித்து, அந்த அம்மையின் வயிற்றில இந்த 'ஆனந்த ஒளி'யைக் கண்டவர்.

அத்தகையவருக்கு, இத்தகைய இடி! கொஞ்சிய மலரை, கொத்திச் சென்றது, தேரோட்டம்!!

கேட்குமனைவரும், சிந்தைநோவர். அவ்வளவு பரிதாபகரமான நிகழ்ச்சி!

சிறுவன், தேர் வடத்தைப்பிடித்திழுத்தானும் — கால் தடுமாறி விழவே, பொடிப் பொடியாகிஇருக்கிறான்.

செட்டியார் தெய்வபக்தி மிக்கவர்தான்—தெரியுமா, தேரின் சக்கரத்துக்கு? அரைத்துப்போட்டிருக்கிறது!

இந்த அலங்கோலக் காட்சியைக் கேள்வியுறுவோர், "ஆண்டவன் செயல்" என்று கூறுவர். ஆனித்திருமஞ்ஞனமும், அறநெறியும் வளர்க்கும் அன்பராம், குழந்தையை இழந்த திருவாளர்—அவரும், கூறுவர். மனம் துடித்திருப்பார்! தேர்ச்சக்கரம் ஏறுவதற்கும், தெய்வத்தின் செயலுக்கும முடிச்சுப்போட விரும்பவில்லை, நாம்.

அவர் போன்றாரின் பக்தியைக் குறைகூறவில்லை நாம்—ஆனால், கடவுளுக்கு இதுதானா பக்திப்பிரீதியான காரியங்களாக இருக்கமுடியும்?

அடியில் வீழ்ந்து மாய்ந்த இளஞ்சிறுவனைக் கடவுள்மட்டும், கண திறந்து பார்த்திருந்தால், இரத்தக் கண்ணீர் வடித்திருப்பார்.

உலகத்தைப் படைத்து, உயிர்களைக் காக்கும் எம்பெருமானை, ½ டன் உருவில் செதுக்கி, 50 டன் தேரில் வைத்து, ஆயிரக்கணக்கானோர், இழுப்பது — நாகரிகம் ஒப்புக்கொள்ளக்கூடிய செயலா!

தேரோட்டம் ஏன்? தீனபந்துவாம் கடவுள், தெய்வ பக்தர்களிடம் இதனையா கேட்கிறார்!

இராசிபுரத்தில் மட்டுமா?—தேர் ஓடுகிறது என்றால், வீதிகளிலிருப்போர், அது நிலைக்கு வந்துசேரும் வரையில், அடையும் அல்லல்கள், கொஞ்சநஞ்சமா.

"ஐயோ! சாய்ந்துவிடும்போலிருக்கிறதே!!"

"ஏ, அப்பா! என்னகதிஆவது?"

"வடம் அறுந்துவிட்டதாம்!!"

"இருவர் மரணம். பலருக்குக் காயம்!!

இதுபோல, பலப்பல ஆபத்துகள், அச்சமூட்டக்கூடிய நிகழ்ச்சிகள், ஒவ்வோர் தேரோட்டத்திலும், ஒவ்வோர் ஊரிலும்.

ஏனிது? இந்தக்கேளிக்கையையா கடவுள் விரும்புவார்! எத்தனை உயிர்கள், பயந்து பயந்து நடுங்குகிறார்கள், இதுவா, பகவானுக்குச் செய்யும் திருத்தொண்டு? பக்திமார்க்கம்!

பெரியதோர் தேரினை, மிகப்பெரிய வடம் போட்டு, வீதியிலே இழுத்துவந்து, இருந்த இடத்தில் வைப்பதால், பக்திமார்க்கம், தழைக்கிறதா? பகவான்தான் பரமதிருப்தியடைவாரெனக்கூற முடியுமா!

வீதியில் தேர் என்றால், பீதிகொள்கின்றனர், மக்கள்.

இத்தகைய பீதியையும் பயத்தையும் அளிக்கும் இதுபோன்ற, வீண் விழாக்கள், நடைபெறவேண்டியது அவசியமா? இதனால், எவ்விதம் பக்திமார்க்கம், தழைக்கமுடியும்?

தேரோட்டம் நடத்திதானா, இயேசுமதமும், இஸ்லாமின் கொள்கைகளும், புத்தரின் போதனையும் ஏற்றம் பெறுகின்றன!—இல்லையே. நமக்குமட்டும் ஏன்? வழிவழி வந்தது எனும் பெயரால், பிஞ்சுகளையும் பெரியவர்களையும், ஏன் பலிகொடுக்கவேண்டும்.

புதுமுறையில் அறநெறியைப் போற்றுவதாசக் கூறிவரும், பக்தர்களே, பதறாதீர்! தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள்!!

திருச்சியில் டால்மியாபுரம் போர் முரசு!

மாபெரும் பொதுக் கூட்டத்தில் கருணாநிதி

2—5—53 மாலை 6-மணிக்கு திருச்சி டவுன்ஹால் மைதானத்தில் மாவட்டச் செயலாளர் தோழர் அம்பில் தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் "டால்மியாபுரம் போராட்ட விளக்கப் பொதுக்கூட்டம்" நடைபெற்றது. தோழர் எம். எஸ். மணி சொற்பொழிவாற்றினார். போராட்டத்தலைவர் மு. கருணாநிதி பேசியதாவது:—

"டால்மியாபுரம் போராட்டம் இன்று முதல் ஆரம்பமாகிவிட்டது என்றுதான் பொருள். கல்லக்குடி தி. மு. க. அரசியல் மாநாட்டின் தீர்மானத்திற்கிணங்க அண்ணாவின் வாழ்த்தும் உங்களின் ஆதரவும் பெற்று நான் படையை நடத்திச்செல்லும் முதல் தலைவனாக பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறேன். போராட்டத்தில் தன்னைத்தானே அர்ப்பணிப்பது—மற்றவரை உருக்குலைப்பது என்ற இருவகையுண்டு. முன்னது அறப்போர்—பின்னது. பலாத்காரவெறிச்செயல். திராவிட முன்னேற்றக் கழகம் அறப்போரைத்தான் விரும்புகிறது. நம்மால் எதிர்க்கப்படுகிற ஆணவத்தை—அதிகார போதையை—ஆதிபத்ய சொரூபத்தைத்தான் அழித்தொழிக்கவேண்டுமே தவிர—அதுதான் நமது கழகத்தின் இலட்சியமே தவிர, வேறு அராஜகமுறையல்ல! நம்முடையஇரத்தத்தடாகம் நாட்டிலே உண்டாக்குகிற உணர்ச்சி மிக மிகப் பெரியது. அந்த நம்பிக்கையிலேதான் களத்திலே குதித்திருக்கிறோம்.

நான் மேடைக்கு வந்ததும் ஒரு தொழிலாள நண்பர் என்னிடம் கையை நீட்டினார். போராட்டத்தலைவனாகிவிட்டேனே என்பதற்குக் கைதாங் கொடுக்கப் போகிறார் என நினைத்து நானும்கையை நீட்டினேன். அவரோ ஒரு கடிதம் கொடுத்தார். அந்தக் கடிதத்தில், "ஏழை எளியவர் வறுமையைப் போக்க எண்ணாமல் வீண்டம்பத்திற்கு டால்மியாபுரம் போராட்டம் நடத்துவது சரியா?" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அவருக்காக அல்ல; அவர் போன்ற எண்ணம் படைத்தவர்களுக்கும், குதர்க்கம் பேசும் தோழர்களுக்கும் நான் பதில் சொல்ல வேண்டியவனாயிருக்கிறேன். ஏழைகளுக்கு இவர்கள் தான் பாடுபடுவது போலவும் நாங்கள் என்னமோ ஏழைகளின் பெருமூச்சிலே தென்றலை ரசிப்பவர்களாகவும்—அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். தரித்திரம் பிடித்தவர்களின் தளர்ந்துபோன நரம்புகளிலே தம்புரா மீட்டுபவர்கள் அல்ல நாங்கள்! ஒடிந்துபோன உழைப்பாளியின் எலும்புகளும் யானையின் தந்தத்திற்கும் ஒப்புவமை பேசிக்கொண்டிருக்கும் உருப்படாத கலாரசிகர்களுமல்ல! எங்கள் கழகமே ஏழைகளின் கூடாரம் தான். அதை உணரவேண்டும், எதற்கும் நாவசைக்கும்தோழர்கள்.

ஏழை மாறுகிறான். அவன் வாழவேண்டும். அந்த மறுமலர்ச்சிக்கு அடிப்படை எது என்று தேடும் முயற்சியிலே தோழர்கள் ஈடுபடட்டும். அப்படிமுயன்றால் திராவிடத்து மக்கள் தேய்வதற்குக் காரணத்தை சுலபமாகக்கண்டு கொள்ளலாம்-வடநாட்டு ஆதிக்கமென்று! அந்த வடவர் ஆதிக்கத்தின் ஒழிப்பிற்காகத் தான் முதற்களமாக டால்மியாபுரத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

பாங்குகள்—இன்ஷ்யூரன்ஸ்கள்—வியாபார நிலையங்கள்—வர்த்தகசபைகள் — தொழிற்சாலைகள் மூலமாக திராவிடத்தை சுரண்டும் வடநாட்டுத்திமிங்கிலங்களிலே ஒன்று தான் டால்மியா! திருச்சி மாவட்டத்திலே நூறு ஏகரா பூமிக்குச்சொந்தக்காரராகவும் மூன்று கோடி ரூபாய் முதலைப் போட்டு தொழிற்சாலை மூலம் திராவிடத்தில் ஆண்டொன்றுக்கு இருபத்தைந்து லட்சத்துக்கு மேல் சுரண்டுகிறவராகவுமுள்ள வடநாட்டுத் தூதுவரை இங்கிருந்து ஈயிலேற்றும்பெரும்பணியைத்திராவிடமுன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. டால்மியாவின் சிமெண்டுத் தொழிற்சாலையிலே ஏறத்தாழ இரண்டாயிரம் திராவிடத் தொழிலாளிகள் வியர்வை சிந்துகிறார்கள். அந்த வியர்வைத் துளிகள்தான வடநாட்டை வளமாக்கும் இருபத்தைந்து லட்சங்கள். இந்த அக்கிரமத்தை ஒழிப்பதற்கு நடத்தப்படும் கால்கோள் விழாதான், டால்மியாபுரப் போராட்டம். இக்கூட்டத்தை போராட்ட அறிவிப்புக் கூட்டமாகக் கருதி நாளை முதலே தனிப்பட்டவர்களும்—சகல கட்சித் தோழர்களும் "டால்மியாபுரம் பெயரை அகற்று" என்ற போர்ப்பரணியைப் பாடத்தயாராக வேண்டும். நேரடி நடவடிக்கையெனும் அறப்போரிலே நாம் இறங்குவதற்கு முன்பே நாம் கோரும் வெற்றியை நமக்கு அளிப்பதுதான் புத்திசாலித்தனமாகும். இந்த வெற்றி வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து திராவிடம் விடுதலைபெற அமைக்கப்படும் முதற்படியாகும். முரசு முழங்கி விட்டது. தனியாக கோரும் படை புறப்பட்டுவிட்டது. தயாராகுங்கள் அணிவகுப்பிலே சேர!" என்பதாகப்பேசிமுடித்தார்.

P. T. C.

Become an Engineer, or a Technician and earn more than Rs. 200 a month by joining one of our following courses:-

1. Civil Engineering
2. Mechanical Engineerig
3. Electrical Engineering
4. Radio Engineering
5. Wireless Telegraphy

Courses begin in June and run for 9 months.

ARTS COURSE

Success guaranteed to every student for S. S. L. C Matric, Inter, B. A., B. Sc., Hons., B. Com.

Tution: Oral and Postal

Hostel and Laboratory attached

Special accomodation for Ladies.

Office:
29, Nandhi koil St,
Teppakulam, Trichy.

P. V. PARTHASARATHI,
PRINCIPAL.

போராட்டம்-இருமுகாமில்

[திருச்சி மாவட்ட தி. மு. க. அரசியல் மாநாட்டில் விக்கிரவாண்டித் தோழர் கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.]

உற்சாக வெள்ளத்திலே மூழ்கிக் கிடக்கும் உங்கள் மத்தியில் பேசச் சந்தர்ப்பம் கிடைத்ததற்கு நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சென்ற தேர்தலின்போது நான் திராவிடநாடுபிரிவினைக்குப்போராடுவதாக உறுதி கூறிக் கையொப்பம் இட்டேன். எனது வெற்றிக்கு கழகம் வாய்ப்பைத் தேடித் தந்தது. ஆகவே எனது வெற்றி தி. மு. கழகத்தின்வெற்றி. என்னைப்போலவே சுமார் 40 தோழர்கள் தி. மு. க. ஆதரவு பெற்றுத் தேர்தலில் வெற்றிக்கொடி நாட்டினார்கள். எங்கள் வெற்றியைப் பாராட்டி அண்ணா அவர்கள் தேநீர் விருந்தும் பாராட்டு விழாவும் சென்னையில் நடத்தினார்கள். அப்போது அண்ணா கூறிய கருத்துகளின்படி என்போன்றோர் நடந்து வருகின்றோம்.

நான் திராவிட நாடு பிரிவினைத் தீர்மானம் சட்டசபையில் விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு, மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்யும்படி கூறினேன்—சபாநாயகர் எல்லை குறிப்பிடவில்லையென்று தீர்மானத்தைத் திருப்பி விட்டார்—அதன் பிறகு நண்பர்கள் இரா. இளம்வழுதி, அண்ணா, நெடுஞ்செழியன் முதலியவர்களைக் கலந்துகொண்டு எல்லையைக் குறிப்பிட்டு மறுபடியும் தீர்மானம் அனுப்பினேன்—ஒரு நாட்டை தனி நாடாக ஆக்க சிபார்சு செய்ய சென்னை அரசாங்கத்திற்கு அதிகாரமில்லை என்று கூறி விட்டார். முதலில் சொன்னது சரியாக இருந்தால் எல்லை குறிப்பிட்ட பிறகு தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளுவதில் தடை யென்னவென்றும், இரண்டாவது கூறுவதுதான் சரி என்றால் அதை முதலிலேயே தெரிவிப்பதற்கு என்ன? என்று கேட்டிருக்கிறேன்—இந்த பிரிவினைத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளும் வரை நான் விடப் போவதில்லை —

நம்மை ஆளும் அரசாங்கம் காந்திய கோட்பாடுகளைக் கொண்டது—அகிம்சை தத்துவத்தை அடிப்படையாக கொண்டு நடைபெறுகிறது என்று ஆச்சாரியார் கூறுகிறார். காங்கிரஸ் ஆட்சிப் பீடமேறி ஆறு ஆண்டுகளாகின்றன. இந்த சுயராஜ்யத்தில் நாட்டு மக்களுக்கு நன்மை செய்யா விட்டாலும்—அவர்கள் ஆட்சியில் தீமைகளும், கொலைகளும் தொல்லைகளும் அதிகம் ஏற்பட்டுள்ளன—இது நமக்கு (எதிர்கட்சிகாரர்களுக்கு) பயங்கர ராஜ்யமாக மாறிவிடுகிறது—இந்த சுயராஜ்யத்தில் தான் ஆசிரியர் வேலாயுதத்தை பட்டம் பகலில் படுகொலை செய்து மரக்கிளையில் தொங்க விட்டார்கள்; சேலம் சிறையிலே 22 கம்யூனிஸ்ட் தோழர்களை பறவைகளைச் சுடுவதுபோல் சுட்டார்கள், தேனியில் காங்கிரஸ் காரர்கள் கலவரம் செய்தார்கள். குன்றத்தூரில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள்—நெல்லிக் குப்பம் மஜீத் படுகொலை செய்யப் பட்டார்! பாண்டியனை சென்னையில் கொன்றார்கள். பாதுகாப்பின் பெயரால் பலரைக் கைது செய்து சிறையிட்டார்கள்—தடியடி தர்பார் பல இடங்களில் நடைபெற்றது—வேலை நிறுத்தம், கதவடைப்பு என்ற பெயரால் தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டபோதெல்லாம், இந்த ஆட்சி, முதலாளிகளுக்கு பாதுகாப்பு அளித்து பாட்டாளிகளுக்கு துரோகம் செய்திருக்கின்றது.

வெள்ளைக்காரனை விரட்டிவிட்டதாக இந்த அரசாங்கம் ஜம்பம் அடிக்கிறது — ஆனால் வெள்ளைக்காரன் வியாபாரத்தின் பெயரால் இன்னும் நம் நாட்டை சுரண்டிக் கொண்டுதான் இருக்கிறான். குறிப்பாகச் சென்னையில் வெள்ளை முதலாளி எவ்வித முன் அறிவுப்பும் இன்றி டிராம்வே கம்பனியை மூடிவிட்டான்.

வீதிகளில் இன்று 1600 குடும்பங்கள் பட்டினியால் பாதிக்கின்றார்கள்—ஏன் இந்த டிராம்வே கம்பனியை அரசாங்கம் தேசிய மயமாக்கக்கூடாது? அல்லது வேலை இழந்த தொழிலாளிகளுக்கு இந்த அரசாங்கம் வேறு வேலை தேடித் தந்ததா?

இந்த நாட்டை வடநாடு, ஆதிக்கத்தின் பெயரால் சுரண்ட ஆரம்பித்துவிட்டது. இங்கு ஆளுகின்ற கவர்னர் வடநாட்டார். தனி ஒருவனுக்கு ஆண்டுதோறும் 1081000 சம்பளம்—

இது ஜனநாயக ஆட்சி என்று கூறப்படுகின்றது. ஜனநாயகம் என்பது மாதிரிக்குக் கூட கிடையாது காங்கிரஸ் ஆட்சியில் — தேர்தலில் தோற்றுப்போன சந்தான அய்யங்காருக்கு கவர்னர் பதவி—செங்கற்பட்டில் பொதுமக்களால் விரட்டப் பட்ட மாஜி மந்திரி திரு. பக்தவச்சலம் அவர்களுக்கு எம். எல். சி. பதவி—பிறகு மந்திரி பதவியும் வரலாம்.

நாட்டில் பஞ்சம், பசிக்கொடுமை அதிகம்—கொலை, கொள்ளை குடிப்பழக்கம் அதிகரித்துவிட்டது. குறைந்தபாடில்லை—சர்க்கார் சிப்பந்திகள் என். ஜி. ஓக்கள், ஆரம்ப ஆசிரியர்கள் சம்பள உயர்வு கேட்டால் சினிமாவுக்குப் போவீர்கள்—சிகெரெட் குடித்து கெட்டு விடுவீர்கள் என்று முதல் மந்திரி உபதேசம் செய்கின்றார்.

கைத்தறி சம்பந்தமாக டில்லி உத்தரவை, சட்டசபையில் ராஜாஜீ படித்து விவாதத்திற்கு வந்தபோது தான், நம் திராவிடநாடு தனியாகப் பிரியவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினேன். அதிகாரமில்லாத ராஜ்ய சர்க்கார் நமக்குத் தேவையில்லை. எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கத்தின் தயவையும் உத்தரவையும் எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது—ஆகவேதான், நாங்கள் சர்வசுதந்திரத் திராவிடநாட்டை டில்லி பிடிப்பிலிருந்து மீட்க விருப்புவதாகக் கூறினேன். அப்பொழுது ராஜாஜியின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது!

நம் தேசத்தின் ஜனாதிபதி ராமேஸ்வரம் போனார். பார்ப்பனர் முன்னால் பஸ்க்கி எடுத்தகாட்சியை செய்தித் தாளில் பார்த்து வருந்தினோம்.

நானும் நண்பர் திரு. கே, வினயகம் எம். எல். ஏ. அவர்களும் ராமேஸ்வரம் போனோம் — பிள்ளை வரம் கேட்க அல்ல! ஆனால், முதலில் பூமிக்கும், பிறகு நிலத்திலிருக்கும் புளியமரம், தென்னை மரம், எலுமிச்சை, பூச்செடி முதலியவைகளுக்கும் தரிசு நிலங்களுக்கும் புதியதாக வரி போடுவதை தடுக்கவே போயிருந்தோம்—அங்கு மூன்று அதிசயங்களைப் பார்த்தோம். அங்கு ஏர் உழுது விவசாயம் செய்வது இல்லை—பூமிக்கடியில் எங்கும் லிங்கம் இருப்பதால் அதன் மீது படும் என்று ஏர் உழுவதில்லை.

இரண்டாவது அங்கு மண்பாண்டம் செய்வதில்லை. காரணம், இராமன் லிங்கத்தை களிமண்ணால் செய்ததால், களிமண்ணைக்கொண்டு எந்தக் காரியமும் செய்வதில்லை.

மூன்றாவது, அங்கு செக்கில் எண்ணை முதலியன ஆட்டுவதுகிடையாது. காரணம்: செக்கு சிவலிங்கமாகக் காட்சியளிப்பதால் யாரும் செக்கு ஆட்டுவது கிடையாது.

டால்மியாபுரம் போராட்டத்தைத் துவக்கப் போகின்றீர்கள் என்பதைக் கேட்டு மகிழ்ச்சியடைகின்றேன். உங்கள் போராட்டம் வெளியில் நடக்கட்டும்; நாங்கள் சட்டசபைக்குள் டால்மியா போராட்டத்தை நடத்துகின்றோம். 'டால்மியாபுரம்' என்ற வார்த்தை ரெயில்வே ஸ்டேஷன் பலகையிலும். சிமிண்ட் ஆலை சிமினியிலும் தான் எழுதியிருக்கிறது. இதை ஒரு நொடியில் இருக்கிற இடம் தெரியாமல் ஆக்கிவிடலாம்.

தென்னாற்காடு மாவட்டத்தில் கோயங்கா தேர்தலில் தோற்காவிடில், நிலக்கரி விளையும் பகுதிகளுக்கு 'கோயங்காபுரம்' உண்டாகியிருக்கும்—நல்லவேளையாகத் தோற்கடிக்கப்பட்டார். தென்னாட்டை வடநாட்டார்கள் சுரண்டுகிறார்கள். அது ஒழிக்கப்படவேண்டும். காங்கிரஸ் ஆட்சிப்பீடம் ஆடுகிறது. ராஜாஜிக்கும் காமராஜருக்கும் காங்கிரஸ் கூடாரத்தில் குத்தும் வெட்டும் ஏற்பட்டிருக்கிறது. காமராஜ் ஆட்சி வரும் என்கிறார்கள், வரட்டும். வந்தால்தான் காங்கிரஸ் ஆட்சிக்கு சீக்கிரம் சாவுமணி அடிக்கமுடியும்!!

10-வது வட்ட தி. மு. க.
நிதிக்காக
—
சி. என். ஏ. தலைமையில்
(சென்னை)
17—5—53 ஒற்றவாடையில்
"வாழ்க்கைப் புயல்"
நாடகம்.
கட்டணம்:—
ரூ. 5, 3, 2, 1, அணா 8.

புதுக் கழகங்கள்

எலையமுத்தூர் 5—5—53 மாலை தி. மு. க. கிளை துவக்கவிழா வெ. காளியப்பன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. துரைக்கண்ணன் கொடி ஏற்றுவித்தார். தோழர்கள் அரசு, ஆறுமுகம், ப. நாராயணன் ஆகியோர் பேசினர்.

காரைமடை 6—5—53 மாலை தி. மு. க. கிளையை தோழர் என். எஸ். இளங்கோ துவக்கி வைத்தார் செயலாளர் பெ. இரா. அய்யாசாமி, துணைச்செயலாளர் கான் தங்கையா பொருளாளர் பழனியப்பன், மாவட்டப் பிரதிநிதி. ஜி. இரங்கநாதன், செயற்குழுவினர்: மாரையன், பரமசிவம், சுப்பிரமணியம், இராமசாமி, சொக்கண்ணன், பழனிச்சாமி, பத்திரப்பன்.

நடைபெற்றவை

பெங்களூர் 3—5—53 சர்வகட்சி சார்பில் நடைபெற்ற மே தினவிழாவில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், மீ. சு. இளமுருகு பொற்செல்வி, தோழியர் பொற்செல்வி இளமுருகு ஆகியோர் தி. மு. க. சார்பில் சொற்பொழிவாற்றினார்கள். அன்றுமாலை 4 மணிக்கு திரு. பழனியப்பன் தலைமையில் தோழியர் பொற்செல்வி இளமுருகுமுத்தமிழ் மன்றத்தைத்துவக்கிவைக்க தோழர் மீ. சு. இளமுருகு பொற்செல்வி சொற்பொழிவாற்றினர்.

டாபீஸ்பேட்டை 4—5—53 தி. மு. க. கிளையை தோழர் மீ. சு. இளமுருகு பொற்செல்வி துவக்கிவைத்தார். தோழியர் இளமுருகு பொற்செல்வி, தோழர்கள் வேணு, சிங், பாண்டியன் ஆகியோர் பேசினர்.

வட ஆற்காடு மாவட்ட
கிளைக்கழகத் தோழர்களுக்கு

31—5—53-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழுவை அரக்கோணத்தில் கூட்டுவதெனப்பொதுச்செயலாளர் அறிவித்துள்ளார். அதற்குண்டான சகல ஏற்பாடுகளும் நடந்து வருகிறது. அன்று மாலை மாவட்ட கழகத்தின் சார்பில் பொதுக் கூட்டம் நடைபெறும். எனவே மேமாதத்தில் கூட இருந்த நமது மாவட்ட செயற்குழு ஜூன் மாதத்தில் கூடுமென தெரிவித்துக் கொள்ளுகிறேன். சிறிது அண்மையில் மாவட்ட மாநாடு நடக்க இருப்பதால் எல்லாக்கிளைக் கழக செயலாளர்களும் கீழ்கணும் குறிப்புபடி அனுப்பவேண்டுகின்றேன்.

1. மாவட்ட பிரதிநிதி ஆண்டுக் கட்டணம் அனுப்பாத தோழர்கள் உடனடியாக அனுப்பிவைக்கவும்.

2. புதுப்பிக்காத பழைய கழகங்களுக்கு, தற்போதுள்ள கிளைக் கழகங்கள் ஊக்கந்தந்து புதுப்பிக்க வேண்டும்.

3. அனுப்பவேண்டிய குறிப்பு:

(அ) செயலாளர் பெயர், துணைச் செயலாளர், பொருளாளர், மாவட்ட உறுப்பினர் — பெயரும் சரியான முகவரியும்.

(ஆ) மொத்த அங்கத்தினர் எண்ணிக்கை—செயற்குழு உறுப்பினர் எண்ணிக்கை. ஊரின் மொத்த ஜனத்தொகை—ரயில் நிலையம்—முதலியன.

(4) தோழர் ஈ. வே. கே. சம்பத் நமது மாவட்டத்தில் ஜூன் முதல் வாரத்திலிருந்து 10-நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்வதால் கூட்டம் அமைக்க விரும்பும் கிளைக்கழக செயலாளர்கள் மாவட்டக் கழகத்திற்கு எழுதித் தேதியைக்குறித்துக் கொள்ளவும்.

எ. எல். சி. கிருஷ்ணசாமி

நெல்லை மாவட்ட
பொதுக் குழு

நெல்லை மாவட்ட தி. மு. கழக பொதுக்குழுக் கூட்டம் 17—5—53 காலை 9-மணி யளவில் பாபநாசத்தில் நடைபெறும். ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் பொருள்கள்.

1. நெல்லை மாவட்ட 2-வது மாநாடு நடத்துவது.
2. மாநாட்டுக்குமுன் முக்கிய பேச்சாளர்களை அழைத்துச் சுற்றுப்பயணம் நடத்துவது.

மத்திய கழகம் உறுப்பினர்சீட்டு பாக்கித்தொகைகளையும் மாவட்டக் கழகத்திற்கு சேரவேண்டிய ஆண்டு கட்டணம் ரூபாய் ஐந்தும் கொடுக்கின்ற பிரதிநிதிகளை மட்டுமே அனுமதிக்கப்படும். எனவே பாக்கியுள்ள கிளைக் கழகங்கள் அன்றேபாக்கி ரூபாயை தந்து மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

ச. வீரபாகு,
நெல்லை மாவட்ட தி. மு. கழகம்,
தலைமை அலுவலகம்,
திருநெல்வேலி.

"31—5—53-ல் அரக்கோணத்தில் பொதுக்குழு நடக்க இருப்பதாலும் அதற்கானசிறந்த ஏற்பாடுகள் — மற்ற வசதிகள் செய்துகொண்டு இருப்பதாலும் மே முடிய எந்த கூட்டத்திலும் கலந்து கொள்ள முடியாமைக்கு வருந்துகின்றேன். தோழர்கள் பொருத்தருள்க" என தோழர் எ. எல். சி. கிருஷ்ணசாமி (வ. மா. செயலாளர்) தெரிவித்துக் கொள்கிறார்.

அரசாங்கப் பொருளாதாரம்

[ஏ. இருதயராஜ், திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரிப் பேராசிரியர்.]

நேர் முக வரிகளும், மறை முக வரிகளும்

வரிகளை நேர்முகமான வரி, மறைமுகமான வரி என்று இருவகையாகப் பிரிக்கலாம். அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட ஆளின்மேல் வரியை விதித்து அவரிடமிருந்து அதை வசூலித்து விட்டு அந்த வரிச்சுமையை அவர் வேறு யார்பேரிலாவது மாற்றிக் கொள்வார் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது. அது தான் மறை முகமான வரி.

யார் வரி செலுத்துகிறரோ அவரே வரிச்சுமையையும் தாங்கிக் கொள்ளும் போது அது நேர்முகமான வரி. ஒருவர் தான் முதலில் வரியை செலுத்தி விட்டு பிறகு மற்றொருவர் மேல் அந்த வரிச்சுமையை மாற்றுவது மறை முகமான வரியாகும். உண்மையில் வரிச்சுமை யார்மேல் விழுகிறதோ அவர்களுக்கே அது தெரியாமல் இருக்கலாம்.

ஒருவருடைய வருமானத்தின் மேல் வரி விதிக்கப்படும் போது அதை அவர் நேரடியாக அரசாங்கத்துக்குச் செலுத்துகிறர். அந்த வரிச்சுமையை அவர் யார் பேரிலும் மாற்ற முடியாது. அதனல் வருமான வரி நேரடியான வரி.

வெளிநாட்டிலிருந்து ஒரு சாமான் நம் நாட்டில் இறக்குமதியாகிறது. அதைத் தருவிக்கும் வியாபாரி துறைமுகத்தில் அந்தச் சாமான்பேரில் விதிக்கப்படும் சுங்கவரியைச் செலுத்துகிறர். ஆனல் அந்தச் சாமானை விற்கும்பொழுது அதன் விலையை உயர்த்தி, தான் செலுத்திய வரியை அந்தச் சாமான் வாங்குபவரிடமிருந்து வசூல்செய்து தன் வரிச்சுமையை மாற்றி விடுகிறர்.

அதுபோலவே ஒரு வியாபாரி வரியைத் தானே அரசாங்கத்துக்கு கட்டிவிட்டு, பிறகு அதைத் தன்னிடம் வாங்க வருபவர்களிடமிருந்து வசூலித்துவிடுகிறர். அதாவது வரிச்சுமையை மாற்றிவிடுகிறர். இது மறைமுகமானவரி.

நேரடியான வரிகள் ஒருவரின் சொத்தின் பேரிலோ வருமானத்தின் பேரிலோ விழுவதால் ஒருவருடைய வரிகொடுக்கும் சக்தியை அளவிட்டு நியாயமான முறையில் குறைந்த வருமானமுள்ளவர்கள் குறைவாகவும், அதிக வருமானமுள்ளவர்கள் அதிகமாகவும் வரி செலுத்த முடிகிறது. ஆனல் பொருள்களின்மேல் வரி விதிக்கப்படும்போது வியாபாரி முதலில் அரசாங்கத்துக்கு வரித்தொகையை கட்டிவிடுகிறர். தான கட்டின வரித்தொகையைக் கூட்டி விலையை உயர்த்தி அப்பொருள்களை விற்கிறர். அப்படி விற்கும்பொழுது வாங்குபவர்களுடைய வருமானத்தையோ வரி கொடுக்கும் சக்தியையோ அவர் கேட்டுத் தெரிந்து கொள்ளுவதில்லை. வரித்தொகையை எல்லோரிடமிருந்தும் வசூலித்து விடுகிறர். வரி கொடுக்கும் சக்தி அதிகமுள்ளவர்களிடமிருந்தும் வரியே கொடுக்கமுடியாத ஏழைகளிடமிருந்தும் வியாபாரி தான் கட்டிய வரித்தொகையை ஈடுசெய்து கொள்வதால் இந்த மறைமுகமான வரிகள் நியாயமானவையல்ல.

ஆனல், செல்வந்தர்கள்மட்டும் உபயோகிக்கும் சாமான்களின்மேல் அரசாங்கம் வரி விதித்தால் இந்தக் குறை ஏற்படாது. உதாரணமாக மோட்டார் கார்களின் விற்பனையின் மேல் வரி விதித்தால் மோட்டார் வியாபாரி முதலில் தானே வரியை செலுத்திவிட்டு மோட்டார் வாங்குபவரிடமிருந்து ஈடு செய்து கொள்கிறர். இம்மாதிரி சாமான்களின் தரத்தைக்கவனித்து மறைமுகமான வரிகள் விதிப்பதன்மூலம பணக்காரர்களின்மேல்மட்டும் வரிப்பளு விழுமாறு அரசாங்கம் செய்யலாம்.

வருவானவரி, சொத்துவரி, முதலிய நேரடி வரிகளைத் தண்டுவது சுலபம். ஒவ்வொருவரும் தங்கள் சொத்து, வருமான விபரங்களை வரி விதிக்கும் அலுவலர்களுக்குச்சமர்ப்பிக்கிறர்கள். அவைகளைப்பரிசீலனை செய்து வரி விதிக்கப்படுகிறது. வரித்தொகை அவர்கள் சர்க்காருக்கு உடனே கட்டிவிடுகிறர்கள் இதில வசூலுக்காக அதிகம் செலவாகிறதில்லை.

ஆனல், சுங்கவரி முதலிய மறைமுக வரிகளை வசூலிப்பது மிகவும் சிரமமானது. சுங்கத்தீர்வை கொடுக்காமல் தப்புவதற்கு அரசாங்கத்தை ஏமாற்றிச் சாமான்களைக் கடத்திச் செல்லுபவர்களைப் பிடிப்பதற்காக அரசாங்கம் ஏராளமான சிப்பந்திகளை காப்பாளர்களாக நியமிக்க வேண்டியிருக்கிறது. அதற்கு ஏற்படும் செலவு ஏராளம்.

வருமானவரி, சொத்துவரி போன்றவைகள் ஒரேயடியாகச் செலுத்தப்படுவதால், செலுத்துபவர்களுக்குச் சிரமம் அதிகம். ஆனல் சாமான்கள்மேல் விதிக்கப்படும் மறைமுகமான வரிகள் சிறிது சிறிதாக ஒவ்வொரு சாமான் வாங்கும் நேரத்திலும் மிகச் சிறிய தொகைகளாகக் கட்டப்படுவதால், அதன் சிரமம் மக்களுக்குத் தெரிவதில்லை.

மறைமுகமான வரிகளைச் சாமான்களை வாங்குபவர்கள் நேரடியாக அரசாங்கத்துக்குச் செலுத்துவதில்லையாதலால், வரி செலுத்தும் நினைப்பே அவர்களுக்கு ஏற்படுவதில்லை. பொது மக்களை இருட்டிலே வரி விதிப்பது போலாகிறது. அதனல் அரசாங்கம் மக்களின் அறியாமையைப்பயன் படுத்திக்கொண்டு ஏராளமான வரிகளைச் சுமத்துவதற்கும் வழி உண்டாகிறது.

சொத்து வரி போன்ற நேரடி வரிகளால் அரசாங்கத்துக்கு எப்பொழுதும் ஸ்திரமான வருமானம் கிடைக்கிறது. அவைகளின் மூலம் எவ்வளவு வரி தண்டலாம் என்று முன் கூட்டியே கணக்கிட முடியும். ஆனல் மறைமுகமான சுங்கவரி முதலியவைகள் எப்பொழுதுமே அரசாங்கத்துக்கு ஸ்திரமான வருமானம் தருவதில்லை. சாமான்களின மேல் விதிக்கப்படும் வரிகளிலிருந்து வரும் வருமானம் அவ்வப்பொழுது வியாபாரம் இருக்கும் நிலையைப் பொறுத்தே இருக்கும். வியாபாரம் செழித்திருக்கும் போது அதிகமாகவும். மந்தமாக இருக்கும் போது குறைந்தும் வசூலாகும். அதனல் தான் இந்த வரிகள் மூலம் அதிக வருமானம் அரசாங்கத்துக்கு வந்த போதிலும் அதை எப்பொழுதுமே அரசாங்கம் முன் கூட்டியே கணக்கிடவோ நம்பியிருக்கவோ முடியாது.

மறைமுகமான வரிகளை அரசாங்கம் எப்பொழுதும் நம்பிக்கொண்டிருக்கமுடியாததற்குக் காரணம், வியாபாரத்தில் மந்தம் ஏற்படும் போது, தொழில் வளர்ச்சியும் தடைப்பட்டு, மக்கள் கஷ்டப்படுவார்கள். அந்தச்சமயத்தில் அரசாங்கம் மக்கள் கஷ்டத்தைப் போக்க அபிவிருத்தி வேலைகள் செய்தாக வேண்டும். அதாவது வியாபார மந்தம் நாட்டில் ஏற்பட்டால் அரசாங்கம் அதிக செலவு செய்யவேண்டி நேரிடும். ஆனல், அந்தச் சமயத்தில்தான் மறைமுகமான வரிகளிலிருந்து கிடைக்கும் வருமானமும் விழுந்துபோகும். வியாபாரம் செழித்து, தொழில் தடையில்லாமல் வளர்ந்து, மக்கள் திருப்தியுடன் வாழ்க்கை நடத்தும் நேரத்தில், அரசாங்கம் அதிக செலவு செய்யத் தேவையில்லை. ஆனல், வியாபாரம் ஓங்கியிருக்கும் அந்த நேரத்தில்தான் மறைமுகமான வரிகள் அதிக வருமானத்தைக் கொண்டுவரும்.

அதாவது அரசாங்கத்தச் செலவு அதிகமாயிருக்கும்போது குறைந்த வருமானமும், செலவு குறைவாயிருக்கும்போது அதிக வருமானமும் மறைமுகமான வரிகள் கொடுக்கும்.

மேலே கூறிய காரணங்களுக்காக மறைமுகமான வரிகள் விரும்பத்தகாதனவென்று ஏற்பட்டாலும், அவைகளை முழுவதுமே நிராகரித்து விடமுடியாது. ஒரு அரசாங்கத்துக்குத் தேவையான வருமானம் முழுவதும் நேரடியான வரிகள் மூலமேயே வசூலித்துவிட முடியாது.

தற்காலத்தில் அரசாங்கங்கள் சாமான்களின்மேல் விதிக்கப்படும் மறைமுகமான வரிகளையே அதிகம் நம்பிக்கொண்டிருப்பது தவறென்று கருதி, கூடுமான அளவுக்கு நேர்முக வரிகளையே அதிகம் விதித்து, ஓரளவுக்குமட்டும் மறைமுக வரிகளை விதிக்கின்றன. பிரிட்டனில் மறைமுக வரிகளால் வரும் வருமானத்தைவிட, நேர்முக வரிகள் மூலம் அதிக வருமானம் திரட்டப்படுகிறது.

மறைமுகமான வரியை நிதானத்துடன் விதிக்கவேண்டும். வருமானம் போதாவிட்டால், மறைமுகமான வரிகளை அதிகரிப்பதைவிட போக்குவரத்துப் போன்ற சில தொழில்களை அரசாங்கமே எடுத்து நடத்துவதன் மூலம் சரிக்கட்டிக் கொள்வதுதான் தற்காலத்தில் சிறந்த முறையாகக்கருதப்படுகிறது.

வரிச்சுமை மாற்றம்

மறைமுகமான வரிகள் விதிக்கப்படும் பொழுது, வரிச்சுமை யார் பேரில் விழுகிறதென்பது பல காரியங்களைப் பொறுத்திருக்கின்றது. சர்க்கரையின்மேல் ஒரு வரி விதிப்பதாக வைத்துக்கொண்டால், சர்க்கரை விற்பவர் அல்லது வாங்குபவர் ஆகிய இருவருள் ஒருவர் மேல் வரிச்சுமை விழும். வீசை ரூ 1-8-0-க்கு சர்க்கரை விற்கிறது. அதன் மேல் ரூ 0-4-0 வரி விதிக்கப்படுகிறது. வரி விதித்த பின்னும் சர்க்கரை பழைய விலை ரூ 1-8-0-க்கே விற்கப்பட்டால் முழு வரிச்சுமையும், வரி செலுத்தும் வியாபாரியின் மேலேயே இருப்பதாக அர்த்தம். விலை ரூ 1-12-0 ஆக உயர்த்தப் பட்டால், முழு வரிச்சுமையையும் வரி செலுத்தும் வியாபாரி வாங்குபவர்கள் மேல் மாற்றி விட்டார் என்று அர்த்தம். விலை ரூ 1-10-0 ஆக உயர்த்தப்பட்டால், வரிச்சுமையை இருவரும் சமமாகப் பகிர்ந்து கொண்டதாக அர்த்தம்.

விற்பனை வரி வியாபாரியிடமிருந்து சர்க்காரால் வசூலிக்கப்படுகிறது. ஆனல் அந்த வியாபாரி முடிந்தால் அந்த வரிச்சுமையை சாமான்கள் வாங்குபவர் மேல் மாற்றி விட முயற்சிப்பார். இது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பது வரி விதிக்கப்பட்ட சாமான் எத்தகையது. விதிக்கும் வரியின் அளவு முதலியவைகளைப் பொறுத்திருக்கிறது.

சாமான்களின் மேல் ஒரு சிறிய வரியை சாமான்களின் விலையை உயர்த்துவதன் மூலம் வாங்குபவர்களின் மேல் வியாபாரி மாற்றி விடலாம். ஆனல் விலை சிறிதளவுதான் உயர்கிறதென்றாலும், வாங்குபவரின் அதிருப்திக்கு ஆளாக வேண்டுமே என்று கவலைப்படும் வியாபாரி “சிறிய வரிதானே; நாமே அதைக் கட்டி விட்டு, வரிச்சுமையை நாமே சுமந்து கொள்ளலாம்” என்றுதான் நினைப்பார். அதனல் பளுவில்லாத சின்னஞ்சிறு வரிகளின் சுமை வியாபாரிகள் பேரிலேயே இருந்து விடுகிறது. ஆனல் அதிக வரி சுமத்தப்பட்டால், தானே அதை சுமந்து கொள்வது சிரமம் என்று நினைத்து வியாபாரி அந்த வரி முழுவதையுமோ அதில் ஒரு பாகத்தையோ வாங்குபவர்களின் மேல் சுமத்த முயற்சிப்பார்.

சர்க்கரையின் மேல் வீசை ஒன்றுக்கு 8 அணு வரிவிதிக்கப்பட்டால் விலையை 8 அணு உயர்த்தினல்தான் முழுவரியையும் வாங்குபவர்களிடமிருந்து வசூலிக்கலாம். ஆனல் சர்க்

புயல் நிவாரண நிதி

ரூ. 27645—7—2

[இதுவரை]

முன்கணக்குபடி	27535—15—2
கொழும்பு பி. கிருஷ்ணன் மூலம்	50—0—0
பம்பாய் தி. மு. கழகம்	25—0—0
அரிசிக்கீர் எஸ். ஜே. சுந்திரன்	34—8—0
	27645—7—2

மு. கருணாநிதி
புயல் நிதிக்குழு செயலாளர்
தி. மு. க.

156 பக்கங்கள் விலை ரூ. 1

விபரங்களுக்கு:—
சேகர் பதிப்பகம்,
முசிறி : திருச்சி.

கரை விலையை வீசை ஒன்றுக்கு ரூ 0—8—0 வீதம் உயர்த்தினால் சர்க்கரை வாங்குபவர்களில் சிலர் சர்க்கரை உபயோகத்தைக் குறைத்துக்கொள்ளலாம். மற்றுஞ்சிலர் சர்க்கரை உபயோகிப்பதை நிறுத்திவிட்டு வெல்லம் உபயோகிக்கலாம். இதனால் சர்க்கரைக்குஉள்ளகிராக்கி குறைந்து வியாபாரம் மந்தமாகலாம். ஆகையால், இந்தச்சந்தர்ப்பத்தில் முழுவரியையும் வாங்குபவர்களின்மேல் சுமத்தாமல் வியாபாரிதான் ஒரு அளவுக்கு வரிச்சுமையை ஏற்றுக்கொண்டு 2 அணாவோ 4 அணாவோ மட்டும் சர்க்கரையின் விலையை உயர்த்தி அந்த அளவுக்கு மட்டும் சுமையை வாங்குபவர்களின் மேல் மாற்றலாம்.

அரிசி முதலிய அத்தியாவசியத் தேவைகளின் மேல் படி ஒன்றுக்கு 4 அணா வீதம் வரி விதிக்கப்படுகிறதென்று வைத்துக்கொள்ளுவோம். அப்பொழுது முழு வரியையும் வாங்குபவர்களின் மீது மாற்றுவதற்குச்சந்தர்ப்பமிருக்கிறது. அரிசி படி ஒன்றுக்கு 1 ரூபாயிலிருந்து 1 ரூபாய் 4 அணாவுக்கு விற்றால், அதனால் விலையேறிவிட்ட காரணத்தால் அரிசி வாங்குவதை யாரும் விட்டுவிட மாட்டார்கள். என்ன விலையாயிருந்தாலும் அரிசியைக் கட்டாயம் வாங்கியாக வேண்டும். அதனால் அரிசி வியாபாரம் குறையாது. எனவே அரிசி போன்ற பொருள்களில் வரி விதித்தால் அதை வியாபாரி வாங்குபவர்கள் மேல் வியாபாரம் குறையுமென்ற பயமின்றி மாற்றி விடுகிறார். அப்பொழுது ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமின்றி வாங்குபவர்கள் எல்லோரும் இந்த வரிச்சுமையை ஏற்றுக்கொள்ளவேண்டியதாகிறது.

இதனாலேயே அத்தியாவசியத் தேவை சாமான்களின் மேல் விதிக்கப்படும் வரிகள் அநியாயமானவை என்று கருதப்படுகிறது.

ஒருவன் உணவுக்காக 20 ரூபாய் செலவழித்தால் போதும் என்று வைத்துக்கொள்வோம். ஒருவனுக்கு 30 ரூபாய் வருமானம் என்றால், அவன் தன் வருமானத்தில் மூன்றில் இரண்டு பங்கு உணவுக்காகச் செலவிடுகிறான். 100 ரூபாய் வருமானமுள்ளவன் அதிக வருமானமுள்ள காரணத்தால் உணவுக்காக அதிகம் செலவழிப்பதில்லை. நல்ல உணவு உட்கொண்டாலும் அவன் 25 ரூபாய் அல்லது 30 ரூபாய்க்கு மேல் செலவழிக்கத் தேவையிருக்காது. அதாவது ஏழைகள் தங்கள் வருமானத்தில் பாதிக்கு மேல் உணவுக்கு செலவழிக்கிறார்கள். பணக்காரர்கள் தங்கள் வருமானத்தில் ஒரு சிறு பகுதியையே உணவுக்காக செலவிடுகிறார்கள். அதனால் உணவுப்பொருள்களின் மேல் வரி விதிப்பதால் ஏழைகளுக்கே பணக்காரர்களைவிட அதிக சிரமம் இருக்கும்.

தேயிலைத்தண்ணீர்மீது வரி விதிக்கப்பட்டால் அதைவிற்பவனே வரிப்பளுவை ஏற்றுக்கொள்கிறான். ஏனெனில் தேநீர் பானத்தின் விலையை உயர்த்தினால் மக்கள் தேநீர் அருந்துவதைக்குறைத்தோ அல்லது அந்தப் பழக்கத்தைவிட்டுவிட்டோ காபிமுதலிய மற்றபானங்களை அருந்துவார்கள். அதனால் தேநீர் விற்பனை குறையும். வியாபாரம் கெடுவதைத் தவிர்க்க தேநீர் போன்ற பொருள்களின்மீது விதிக்கப்படும் வரிகளின் சுமையை வியாபாரிகளே ஏற்றுக்கொள்கின்றனர்.

சீக்கிரம் அழிந்துபடக்கூடிய மீன், பழங்கள்போன்ற பொருள்களின்மேல் வரி விதிக்கப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். அந்த வரியை வியாபாரி கட்டிவிட்டு அதை வாங்குபவர்களிடமிருந்து வசூலிக்க நினைத்தால் விலையை உயர்த்தவேண்டும். அதன் காரணத்தால் அப்பொருள்கள் காலந்தாழ்ந்து விற்பனையாகும். ஆனால் காலந்தாழ்ந்தால் அவை அழிந்துபடக்கூடும். ஆதலால் வரிச்சுமையை தானே ஏற்றுக்கொண்டு விலையை உயர்த்தாமல் வியாபாரி பழைய விலைக்கே விற்றுவிடுவான்.

கிடைப்பதற்கு அரிதான சாமான்களின் மேல் வரி விதித்தாலும் தேநீருக்கு காபி இருப்பதைப் போல், மாற்றுப் பொருள்கள் இல்லாத சாமான்களின் மேல் வரிவிதித்தாலும், அந்தவரிச்சுமை கட்டாயம் வாங்குபவர்களின் மேல் மாற்றப்படும். ஏனெனில் விலை உயர்வின் காரணமாக மக்கள் அவைகளை வாங்குவதை விட்டு வேறு பொருள்களை வாங்க முடியாது.

மோட்டார்கார்களின் மேல் வரி விதிக்கப்பட்டால், வரியின் அளவுக்குக் காரின் விலை ஏறும். கார் வாங்கக் கூடிய சக்தியுள்ள பணக்காரர்கள் விலை ஏறிவிட்ட காரணத்தால் கார் வாங்குவதை நிறுத்திவிட மாட்டார்கள். ஆகவே இம்மாதிரி பணக்காரர்களின் போகப் பொருள்களின் மேல் விதிக்கப்படும் வரிகள் விஷயத்தில் வியாபாரி முழுச்சுமையையும் வாங்குபவர்களமேல மாற்றி விட முடியும்.

★

திருவிளையாடல்கள்

தனி நபர்களிடமிருந்து லஞ்சம் வாங்கியதாக வெங்கடராமன் ஐ. சி. எஸ். எனும் டில்லி சர்க்கார் அதிகாரிமீது, விசாரணை நடந்து முடிந்திருக்கிறது. இப்போது எஸ். ஒய். கிருஷ்ணசாமி எனும் மற்றோர் உயர்தர டில்லி அதிகாரிமீது, லஞ்ச ஊழல் வழக்கு நடைபெற்று வருகிறது.

*

டில்லி மந்திரி தேஷ்முக், பம்பாயிலிருக்கும் தமமுடைய பணக்கார நண்பரொருவருக்கு சலுகை தந்தாராம். ரூ. 30 லட்சம் செலுத்த வேண்டிய வருமான வரியை 10 லட்சமாகக் குறைத்து, உத்தரவிட்டாராம், நிதி மந்திரி. இந்தச் செய்கையை வன்மையாகக் கண்டித்து, விளக்கம் வந்துள்ளது 'கல்கி' இதழில. மறைந்த தோழர் ஆர். கே. சண்முகம் அவர்கள்மீது இத்தகைய குற்றம் வீசப்பட்டதும், உடனே அதைப் பொறுக்காமல் அவர் டில்லியைத் 'தலை முழுக' நேர்ந்ததையும், நாடு அறியும். தேஷ்முக் விஷயத்தில், பண்டித நேரு, எதுவும் கூறவில்லை. ஏன்?

*

பல டில்லி மந்திரிகள், தத்தமது வேலைகள் என்னென்னவென்பதையே இன்னும் அறிந்துகொள்ளாவிருப்பதாகக் கடந்த வாரம் பார்லிமெண்டில், பண்டித நேரு, வெளியிட்டிருக்கிறார். சட்ட மந்திரி பிஸ்வாஸ், சட்டத்தைப்பற்றியே தெரிந்துகொள்ளவில்லையாம்!

*

ஒவ்வொரு டில்லி மந்திரிக்கும் சம்பளம் தவிர்த்து விருந்து அலவன்சு என்கிற பெயரில் ரூ. 500 தரப்பட்டுவருகிறது. நிதி மந்திரி தேஷ்முக், இந்தத்தொகையைத் தமது உபயோகத்துக்கு எடுத்துக் கொள்வதில்லையென்று தேஷ்முக்கைப் பாராட்டிப்பேசினார், ஒருவர். ஆனால், தேஷ்முக், தாம் அப்படிச் செய்வதில்லையெனறும், தானும் அத்தொகையைப் பெற்று வருவதாகவும் கூறினார்!

*

புயல் நிவாரண நிதி அளிப்பு விழா

சென்னை பச்சையப்பன் கல்லூரித் திடலில்

23—5—53 மாலை 5-மணிக்கு

பொதுச்செயலாளர் **அண்ணா** முன்னிலையில் நடைபெறும்.

தோழர்கள் நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, என். வி. நடராசன், மதியழகன், ஆகியோரும் மற்றும் கலைஞர்கள் என் எஸ் கிருஷ்ணன், கே. ஆர். ராமசாமி, எம். ஜி. ராமச்சந்தர், சிவாஜி. கணேசன் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

மு. கருணாநிதி,
செயலாளர், புயல் நிதிக்குழு, தி. மு. க.

வண்டனில், முன்பு ஹைகமிஷனராக இருந்த வி. கே. கிருஷ்ண மேனன், டில்லி மேல் சபைக்கு சென்னையிலிருந்து தேர்ந்தெடுக்கப் படுவாராம். கோபாலசாமி அய்யங்கார் இறந்த இடம், இவரால் பூர்த்தி செய்யப்பெறுமாம்.

*

சென்னை நிதியந்திரிசுப்ரமணியம், திருச்சி – கோவை – முதலிய நகரங்களுக்கு அடிக்கடி விஜயம் செய்கிறாராம். அங்கெல்லாம் போய், "ராஜ ஜிக்கும் — காமராஜருக்கும் சண்டையில்லை" என்று, பல்லவி, பாடுகிறாராம்.

*

"தியாகிகளுக்கு நிலமில்லை!" இது, சி. ஆர். சொல்வது.

"நிலமில்லையென்றால், நீ, இல்லை. ஒழித்துவிடுவோம்" — இது, காங்கிரஸ்காரர்கள் கூறுவது.

✲

உலகத்துப் பிரஜை!

மகாராணி அவர்களே!

மனித உரிமைகளின் பெயரால் தங்களை வேண்டிக் கொள்கிறேன். கையில் காசில்லாத என்னை, இங்கிருந்து போகும்படி விரட்டுகிறார்கள். நான் எங்கே செல்வேன்? காசில்லை! காசு சம்பாதிக்கவோ, வழியில்லை!! தவிக்கும் என்மீது கருணை காட்டுங்கள். சில நாட்களுக்காவது, உங்கள் நாட்டில் வாழ அனுமதி தாருங்கள். கொஞ்சம் பொருள் கிடைத்ததும், இந்தியாவுக்குப் புறப்பட்டுப்போய் விடுகிறேன். என்னைவிரட்டாதீர்கள். இப்போது, காசு கிடைத்தால்கூட, நான் வெளியேறத் தயார். ஆகவே, என் மீது அன்புவைத்து அனுமதியளியுங்கள். மனித நீதியின் பெயரால் வேண்டிக்கொள்கிறேன்! மனித அடிப்படை உரிமைகளின் பெயரால் வேண்டிக் கொள்கிறேன்.

தங்கள்,
கேரி டேவிஸ்.

*

இவ்விதம், விரைவில் மணி மகுடம் சூட்டிக் கொள்ளப் போகும் பிரிட்டிஷ் ராணி எலிசபெத்துக்கு, கடிதம் தீட்டினான், 31 வயதுள்ள டேவிஸ் எனும் வாலிபன்.

கடிதம் தீட்டியதோடு மட்டுமன்றி பக்கிங்ஹாம் அரண்மனையை வட்டமிட்டபடி "எனக்குப் போக்கிடமில்லை. எங்கே செல்வதென்றும் புரியவில்லை. ஆகவே, இங்கே அலைந்து கொண்டிருக்கிறேன். எது நேர்ந்தாலும் கவலையில்லை!" என்று, கூறிக்கொண்டிருக்கிறான். அவனைக் கைது செய்து, நீதி மன்றத்துக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள்.

டேவிஸ், பிரிட்டிஷ் பிரஜையல்ல. பிரிட்டனில் தங்கியிருக்கும்படி கடந்த ஏப்ரல் 28-ந்தேதி வரையிலும், அனுமதிச்சீட்டு இருந்தது.

அதைப் புதுப்பிக்க விரும்பிய போது, அவன் பிரிட்டனில் தங்கக் கூடாதென, அதிகாரிகள் கூறிவிட்டனர். அதனாலேயே மேற்படி கடிதம் தீட்டிவிட்டு, அரண்மனையைச் சுற்றிக் கொண்டிருந்தான். அவனை, யாராவது, சந்தித்துக் கேட்டால், "நான் மனிதகுலத்திலே ஒருவன் உலகத்துப் பிரஜை! எனக்கு வாழ, இடமளிக்கக்கூடாதா?" என்று உரிமையோடு கூறுகிறானாம்.

இப்போது, அவனை நீதிமன்றத்துக்கு இட்டுச் சென்றிருக்கிறார்கள். அங்கு போகுமுன், பிரிட்டிஷ் அதிகாரியொருவர், அவனைக் கேட்டாராம்:

"உனக்குத் தரப்பட்ட அனுமதி காலம் முடிவடைந்துவிட்டது தெரியுமா?"

"தெரியும்!"

"தெரிந்தும், ஏன், பிரிட்டனில் இருக்கிறாய்......"

"இந்தியாவுக்குப் போகலாமென்று ஆசை!"

"போவதுதானே......"

"கப்பலேறக் கையில் பணமில்லையே!"

என்று, பதில் தந்தவண்ணம், பிரிட்டிஷ் ராணிக்குத் தான் தீட்டிய கடிதத்தையும் காட்டியிருக்கிறான்.

*

எலிசபெத் ராணியாரின் முடிசூட்டு விழா குறித்து, பிரமாதமாக ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இலண்டன் மாநகரில்—ஏராளமான பணம் செலவிடப்படும் பிரிட்டிஷ் பூமியில்—இருக்க இடமில்லையென்று, விரட்டப்படுகிறான், ஏழையொருவன்.

இந்த ஏழை, மேயர் டேவிஸ் எனும் அமெரிக்க நாட்டியக்காரரின் மகனாகும். 1948-ல் அமெரிக்க சர்க்காரின் 'பாஸ்போர்ட்டை'க் கிழித்தெறிந்துவிட்டு, பாரிஸ்மாநகரத்தில் கூடிய ஐக்கிய நாடுகள் சபையின்முன், "நான் ஒரே உலகத்தைக் காக்கப் பாடுபடப்போகிறேன்!" என்று கூவிக்கொண்டிருந்தான்.

இரண்டு ஆண்டுகள் எங்கெங்கோ அலைந்தபின்னர், தன்னை அமெரிக்கப்பிரஜையாகவே கருதும்படி, அமெரிக்க சர்க்காரைக் கேட்டுக்கொண்டான். அது முதல், ஒவ்வோரிடமாகத்திரிந்து பிரிட்டனுக்கு, வந்தான்.

இப்போது, நீதிமன்றத்தில் நிர்க்கதியான நிலையில் நின்றுகொண்டிருக்கிறான்.

"இந்தியாவுக்குப் போக ஆசை, கப்பலேறப் பணமில்லை" என்று கூறியவண்ணம், கதறிக்கொண்டிருக்கிறான்.

"உலக மக்களிலே நானும் ஒருவன். என்றால், வாழ முடியவில்லை! ஒவ்வொரு நாட்டினரும், விரட்டுகிறார்கள். மனிதர்கள் வாழும் உலகில் மனிதனாகிய நான் உலவுவதற்குக் கூடத்தடையா?" என்று வேதனையோடு கேட்கிறான்.

'விசித்திரமானவன்'—என்கின்றனர், பிரிட்டிஷ் மேதைகள்.

அவனோ, 'வேதனையை அனுபவிப்பன்' என்றுகூறினான். நீதியை எதிர்பார்த்து, நீதிமன்றத்தில், நிற்கிறான்.

விரைவில், அவன் போக்கைகக்ண்டிக்கும் வகையில் பிரிட்டிஷ் நீதிமன்றம், தண்டிக்கலாம். ஆனால், அவன் விரும்புவதாகக்கூறும்மனித நீதி?

★

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram